## ஆய்வேட்டைத் தயாரிப்பதற்கான விதிமுறைகள்.

ஆய்வேட்டின் சொற்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மேற்பார்வையாளரின் பரிந்துரைகளுக்கு அமைய பீடச் சபையால் முறையான அனுமதி தரப்படாதவரை ஆய்வேடானது அண்ணளவாக 20,000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும் (அதிகூடியது 100 பக்கங்கள்). தலைப்புப் பக்கம், உறுதியுரைப் பக்கம், நெறியாளர் சான்றுரைப் பக்கம், துறைத்தலைவரின் சான்றுரைப் பக்கம், நன்றியுரை, ஆய்வுச்சுருக்கம், பொருளடக்கம் மற்றும் அட்டவணைகள், வடிவங்கள் என்பவை இவ் எண்ணிக்கை மட்டுப்படுத்தலுக்கு உட்பட்டவையல்ல. .உசாத்துணை நூல்களை அடுத்து பின்னிணைப்புக்கள் இணைக்கப்படல் வேண்டும்.

1. தாளின் அளவு-A4
2. அட்டைப்பக்கம்:

   (மாதிரி அட்டைப் பக்கத்திற்கு இணைப்பு I ஐப் பார்க்கவும்

   அட்டையில் இடம்பெறும் விடயங்கள் தமிழில் தரப்பட வேண்டும்.

   தலைப்புப் பக்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அதே விடயங்களை தனித்தனி தாள்களில் உள்ளடக்கியிருக்கலாம்.)
3. ஆய்வேட்டு அட்டையின் முதுகுப் பக்கம் (Spine)

   (மாதிரி Spine பக்கத்திற்கு இணைப்பு II ஐப் பார்க்கவும்).
4. முதற்பக்கம் மற்றும் கடைசிப்பக்கம் வெறுமையானதாகவும் தடித்த தரமான தாளிலானதாக இருத்தல் வேண்டும்.
5. தலைப்புப் பக்கம்

   (தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனி தாள்களில் தரப்படலாம்).

   (மாதிரித் தலைப்புப் பக்கத்திற்கு இணைப்பு III ஐப் பார்க்கவும்).
6. உறுதியுரைப் பக்கம்

   (மாதிரி உறுதியுரைப் பக்கத்திற்கு இணைப்பு IV ஐப் பார்க்கவும்).
7. நெறியாளர் சான்றுரைப் பக்கம்.

குறித்த ஆய்வேடானது நூலகத்திலும், பாடத்துறையிலும் வைப்பதற்குத் தகுதிவாய்ந்த ஆவணமென நியமிக்கப்பட்ட நெறியாளரால்(களால்) அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(மாதிரி நெறியாளர் சான்றுரைப் பக்கத்திற்கு இணைப்பு V ஐப் பார்க்கவும்).

**8.** துறைத்தலைவரின் சான்றுரைப் பக்கம்.

ஆய்வுக்கட்டுரை/ஆய்வேடு துறைத்தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(துறைத்தலைவரின் மாதிரி சான்றுரைப் பக்கத்திற்கு இணைப்பு VI ஐப் பார்க்கவும்).

**9.** நன்றியுரை.

நன்றியுரை புதிய பக்கத்தில் தரப்படல் வேண்டும்.

**10.** ஆய்வுச்சுருக்கம்.

ஆய்வுடன் தொடர்புடைய சுருக்கத்தை தெளிவாக வழங்குதல் வேண்டும்.

(250-300 சொற்கள்)

தனியாக வெளியிடுவதற்கு தகுந்த வடிவத்தில் ஆய்வுச்சுருக்கமானது அமைதல் வேண்டும். அத்துடன் அவை ஆய்வாளரின் நெறியாளரால் செம்மைப்படுத்தப்படலாம். தேவைப்படின் ஆய்வாளரிற்கு மேலதிக தகவல்கள் வழங்கப்படாது ஆய்வுச்சுருக்கத்தைப் பல்கலைக்கழகம் வெளியிடலாம்.

**11.** பொருளடக்கம்.

பொருளடக்கத்துக்கான பக்கங்களில் அரேபிய இலக்கத்தைப் பயன்படுத்தி அதன் தசம முறைக்கு அமைய பிரிவுகளின் இலக்கங்கள் இடப்படுதல் வேண்டும். மேலும், உப பிரிவுகள் பொருளடக்கத்தின் முதற்பக்கத்தில் இருக்க முடியும். அத்துடன் எளிய உரோமன் இலக்கங்கள் ஆய்வுச்சுருக்கத்தின் முடிவுவரையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**12.** பொருளடக்கத்தைத் தொடர்ந்து தேவையேற்படின் அட்டவணைகளின் வடிவங்களின் பட்டியல் அமையலாம் (இவை எளிய உரோமன் இலக்கங்களில் அமைதல் வேண்டும்).

13. அறிமுகம் அல்லது ஆய்வேட்டின் ஏனைய தொடக்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்காக அமைதல் வேண்டும். இவ் அறிமுகப் பக்கத்திலிருந்து இலக்கமிடுவது ஒன்றிருந்து தொடர்ந்து செல்ல வேண்டும். ஆனால் இறுதிப்பக்கம் ஒன்றிலிருந்து ஆரம்பிக்கும் அராபிய இலக்கங்களால் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

14. ஆய்வேட்டின் விடயங்களுக்குப் பின் அடுத்ததாக புதிய தாளில் உசாத்துணை நூல்களின் பட்டியல் இடம்பெறவேண்டும். உசாத்துணை நூல்களின் விடயங்கள் (பாடத்துறை பரிந்துரைக்கும் முறைப்படி இடப்படுதல் வேண்டும்.

15. பின்னிணைப்புக்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றை இணைத்தல்.

16. எல்லைகள் (margins) - Text Pages Margin: Top- 3cm
    Right-2 cm (வலத பக்கம்)
    Bottom-3cm (மேல்)
    Left-4cm (கட்டுவதற்கான இடம்) (இடது பக்கம்)

17. வாக்கியங்களுக்கிடையிலான இடைவெளியும் எழுத்துருவும்(Text Spacing and Font).

    இரண்டு மடங்கு இடைவெளியும் ((2.0)Double spacing), எழுத்துரு அளவு 12 புள்ளி font ஆகவும் ஆங்கில எழுத்திற்கு 'Times New Roman' னும் தமிழுக்கு 'Bamini' யையும் பயன்படுத்துக.

    பந்தி பிரித்தல் பந்திகளுக்கிடையில் வெற்று இடைவெளியால் அல்லது பந்தியின் முதல் வரியினை ஐந்து தடவை இடைவெளி(five spaces) அளிக்கப்பட்டு பிரிக்கலாம்.

18. பக்க இலக்கமிடல்.

    பக்கத்தின் கீழ்ப்பகுதியில் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். இது தாளின் கீழ் விளிம்பிலிருந்து 15mm உயரத்தில் இருத்தல் வேண்டும்.

19. ஆய்வேட்டைக் கட்டுதல்.

வெள்ளை நிற தடித்த அட்டையில். கறுப்பு நிறத்தில் எழுத்துக்கள் இடம்பெறவேண்டும்.

**20.** மேலுறை(Jacket) வெள்ளை நிற மேற்புற அட்டையில் கறுப்பு நிறத்தில் எழுத்துக்கள் இடம்பெறவேண்டும்.

இணைப்பு I –மாதிரி

அட்டைப் பக்கம்

(எழுத்துரு(Font)-Times New Roman/Baamini: Font Size-16; Font Style-Bold)

**<முழுமையான தலைப்பு>**

**<ஆய்வாளரின் முழுப்பெயர் >**

**<பதிவிலக்கம் >**

**<சுட்டெண் >**

**<இளங்கலைமாணிப்பட்டம்/ நுண்கலைமாணிப்பட்டம் (ஆண்டு) >**

**<துறை>**

**<கலைப்பீடம் >**

**<யாழ்ப்பாண பல்கலைக்கழகம் >**

**<இலங்கை>**

**<ஆய்வேட்டைச் சமர்ப்பிக்கும் ஆண்டு>**

**இணைப்பு II –மாதிரி**

**ஆய்வேட்டு அட்டையின் முதுகுப் பக்கம்.**

**B.A**

< ஆய்வாளரின் முழுப்பெயர் >

<ஆய்வேட்டின் தலைப்பு>

<பாடம் >

**2016**

**இணைப்பு III –மாதிரி**

**தலைப்புப் பக்கம்**

**(எழுத்துரு (Font)-Times New Roman/Baamini: Font Size-16)**

**<முழுமையான தலைப்பு>**

<பாடம் > இல் **இளங்கலைமாணி/ நுண்கலைமாணி (ஆண்டு)**

**(Font Size-17; Font Style-Bold)**

பட்டப்படிப்பின் ஒரு பகுதியாக இவ் ஆய்வேடு

<துறை>, கலைப்பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்

சமர்ப்பிக்கப்படுகின்றது.

**<ஆய்வாளரின் முழுப்பெயர்>**

**<ஆய்வேட்டைச் சமர்ப்பிக்கும் ஆண்டு>**

**இணைப்பு IV –மாதிரி**

**உறுதியுரைப் பக்கம்**

**உறுதியுரை**

இவ் ஆய்வேடானது எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் எந்தவொரு பட்டத்திற்காக அல்லது தகைமைக்காக அல்லது தகைமைச் சான்றிதழுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் எதனையும் கொண்டிருக்கவில்லையென்றும், எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும், எட்டியவரையில், உரியமுறையில் இங்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் யாவும் என்னுடைய சொந்தக் கருத்திலிருந்து வெளிப்பட்டவையெனவும், இதில் ஏதேனும் தவறிழைத்திருப்பின், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தினால் முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உடன்படுகிறேன் என்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன்.

---------------------------------------------------------

பரீட்சார்த்தியின் முழுப்பெயரும் கையொப்பமும்

**இணைப்பு V –மாதிரி**

**நெறியாளர் சான்றுரைப் பக்கம்**

**நெறியாளர்(கள்) சான்றுரை**

இளங்கலைமாணிப் பட்டம் <துறை> வழங்கப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட <ஆய்வின் தலைப்பு> எனும் ஆய்வேடு <ஆய்வாளரின் முழுப்பெயர்> என்பவரால் தனித்துவமாக ஆய்வு செய்யப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் எழுதப்பட்டதென்று சான்றுரை வழங்குகின்றேன்.

..................................................................

மேற்பார்வையாளரின் பெயரும் கையொப்பமும்

...............................................................................................

இணை மேற்பார்வையாளரின் (இருக்கும் பட்சத்தில்) பெயரும் கையொப்பமும்

...............................................................................

ஆலோசகரின் (இருக்கும் பட்சத்தில்) பெயரும் கையொப்பமும்

## இணைப்பு VI –மாதிரி

## துறைத்தலைவரின் சான்றுரைப் பக்கம்

### துறைத்தலைவரின் சான்றுரை

இளங்கலைமாணிப் பட்டம் <துறை> வழங்கப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட <ஆய்வின் தலைப்பு> எனும் ஆய்வேடு <ஆய்வாளரின் முழுப்பெயர்> என்பவரால் தனித்துவமாக ஆய்வுசெய்யப்பட்டு எழுதப்பட்டதென்று சான்றுரை வழங்குகின்றேன்.

……………………………………………..

துறைத்தலைவரின் பெயரும் கையொப்பமும்